# அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் காதலர் பெண்டிர் நிலை ஓர் ஒப்பீடு

6

பா.மகேஸ்வரி, உதவி பேராசிரியர்
நுண்ணுயிரியல் துறை, STET மகளிர் கல்லூரி , மன்னார்குடி

ஆய்வுச் சுருக்கம்

காலத்தை வென்ற காவியமாம் அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் வரலாற்று புதினத்தில் பெண் கதாபாத்திரங்கள் மிக வலிமையுடனும் மதிநுட்பமுடையவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளது அவர்களுள் முக்கியமானவர்களான , குந்தவை , பூங்குழலி , வானதி , மணிமேகலை ஆகியோரது காதல் நிலையை ஒப்பீடு செய்யும் முகத்தான் இவ்வாய்வு கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது

அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன், காலத்தை வென்ற காவியம் என கொண்டாடப்படுவதன் மிக முக்கியமான காரணம், கதை மாந்தர்கள் மற்றும் அவர்கள் மூலம் கதையை கையாண்ட விதம் என, பல பிற்கால நாவல்களும், திரைப்படங்களும், அவற்றின் கதை நாயகன் நாயகியின் பிம்பங்களை உருவாக்க அடித்தளம் இட்டதர்க்கும், அப்பிம்பங்கள் எக்காலத்திற்கும் பொருந்துவதாக அமைவதும் தான் இந்த வரலாற்று புதினத்தின் வெற்றியாக கொள்ளலாம்.

அவ்வகையில் இப்புதினத்தில் பல முக்கிய கதைமாந்தர்கள் உலவும் போதும், கதையின் ஊடே செல்லும் பெண் மாந்தர்கள் அவர்களின் எண்ண ஓட்டங்களும், அவர்களின் தாக்கங்களும் இவற்றின் அடித்தளமாக கல்கி அவர்கள் கட்டமைத்த காதல் பெண்டிர் நிலையையும் விளக்க முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அவற்றுள் மிக முக்கியமான பெண் கதாபாத்திரமான நந்தினி தேவி மற்றும் செம்பியன் மாதேவி அன்றி, ஏனைய பாத்திரங்களான குந்தவைபிராட்டி, மணிமேகலை, வானதி, பூங்குழலி இவர்களது கதாபாத்திரங்களை ஒப்பியல் செய்ய இதன்மூலம் முயன்றுள்ளோம்.

**குந்தவை பிராட்டி**

குந்தவை பிராட்டி சுந்தர சோழ மன்னனின் தவப்புதல்வி, ஆதித்தகரிகாலனுக்கும், அருள்மொழி வர்மனுக்கும் இடையில் பிறந்தவள். அவளது அழகும், அறிவும் அக்கால சோழ தேசமெங்கும் பேசப்படவும், கொண்டாடப்பட்டும் வந்துள்ளது.

பொன்னியின் செல்வனின் கதை மாந்தருள் மிக முக்கியமானவர்களான, சுந்தரசோழ சக்ரவர்த்தி, அமைச்சர் அனிருத்த பிரம்மராயர், ஆதித்த கரிகாலன், அருள்மொழி வர்மன், செம்பியன் மாதேவி, குடந்தை சோதிடர் உட்பட யாவரும் குந்தவையின் அறிவை புதினத்தின் பல்வேறு இடங்களில் போற்ற காண்கிறோம். இதுவும் தவிர நந்தினியும், நந்தினியின் துர்போதனைகளால் பீடிக்கப்பட்டவரான பெரிய பழுவேட்டரையரும், சிறிய பழுவேட்டரையரும் கூட இளைய பிராட்டி குந்தவையின் அறிவாற்றலையும், குறித்து உயர்வாக சொல்லவே காண்கிறோம்.

குந்தவை அழகும், அறிவும் மட்டுமின்றி இக்கால பெண்களும் விரும்பக்கூடிய வகையில் அழகு கலை, நுண்ணறிவு, மற்றும் ஆழ்ந்த அரசியல் நோக்கும் உடைய பெண் ஆவாள். அதனாலேயே பல சிற்றரசர்கள், தங்கள் மகளிர் அவளுக்கு குற்றேவல் புரிந்தேனும் புகழ் அடையட்டும் என எண்ணினார்.

மேலும், இப்பெண் தன்னுடைய பொருளைக் கொண்டு ஆதுர சாலைகளை ஏற்படுத்தி, சோழ தேச மக்கள் நோய்களில் இருந்து காத்து கொள்ளவும் வகை செய்தவர் என்றால் அவர் மக்கள் மேல் கொண்ட பற்றையம் தொலைநோக்கு சிந்தனையையும் அறியலாம்.

**மணிமேகலை**

மணிமேகலை கடம்பூரின் இளவரசி. கடம்பூர் சிற்றரசர் சம்புவரையரின் மகள். இவளது அண்ணன் கந்தமாறனின் அன்பிற்குரிய தங்கை. இவள் முற்றிலும் குந்தவைக்கு நேர் மாறாக கல்கி அவர்களால் காட்டப்படுகிறார். சில இடங்களில் மணிமேகலையின் வாய்வழியாகவே, தஞ்சை அரண்மனை பெண்கள் போல் நாகரிகம் குறைந்த பெண்கள் தாம் என்று கூறிக்கொள்கிறார்கள்.

மணிமேகலையை வந்தியதேவன் வழியாக நாம் கடம்பூர் மாளிகையில், சதியாலோசனை நடந்த அன்றுதான் முதன்முதலாக காண்கிறோம். அவள் வந்தியதேவன் எண்ணியதற்கு மாறாக, சம்பு வரையர் குல பெண்கள் சற்று கருமை ஆயினும் களைபொருந்தியவர்களாக இருப்பதாக எண்ணுகிறான். இதிலிருந்து மணிமேகலையை நேரடியாக குறிப்பிடாத போதும், தன்னை சிறப்புற அலங்கரித்து கொள்ளவும் அறியாத படிக்க தெரியாத பேதை பெண்ணாக கல்கி காட்டியுள்ளார். ஆயினும் மணிமேகலை அண்ணன் இடத்தில் மிகுந்த அன்பு கொண்டுள்ளாள். அண்ணன் வாயிலாகவே வந்தியதேனை அறிந்து காதல் கொள்கிறாள்.

யாழ் மீட்டி, இன்னிசையுடன் இனிய குரலில் பாடும் ஆற்றலை பெற்றவள். நந்தினியின் சூது கொண்ட வார்த்தைகளை நம்பி அவளிடமும் அன்புடன் உள்ளவன். இப்படி பல வகையிலும் பேதமை கொண்ட சிறு பெண்ணாயினும் வாசகர்கள் மிகவும் விரும்பும் கதை மாந்தர் மணிமேகலை என்றால் அது மிகையல்ல.

**பூங்குழலி**

இவள் கோடியக்கரை களங்கரை விளக்க அதிகாரி தியாகவிடங்கரின் மகள். படகோட்டி பெண், அலைகடலின் அலையோடு விளையாடி, புயலோடும், புனலோடும் சாகசம் புரியும் வீரமும், விவேகமும் நிறைந்த பெண். மற்ற எல்லா பெண் மாந்தர்களைவிடவும் பூங்குழலி மிகுந்த வலிமைமிகு பாத்திரமாக கல்கி உருவாக்கியுள்ளார்.

வந்தியதேவனிடமிருந்து ஓலைகளை கடற்கரையில் இருந்து கவர்ந்து சென்று, அவனை பழுவேட்டைரையரின் வீரர்களிடம் இருந்து தப்புவித்து இலங்கைக்கு ஓடத்தில் கொண்டு சேர்த்ததும், அருள்மொழிவர்மனுடன் யானை மீதேரி வந்து அவள் அத்தை மந்தாகிணி தேவியை சந்திக்கவும், வைக்கிறாள். மீண்டும், ஆழியின் சுழலில் சிக்கிய அருள்மொழி வர்மனையும் வந்தியதேவனையும் மீட்டு, சதிகாரர்களிடம் அருள்மொழி வர்மன் உயிரோடு இருப்பதை மறைத்து நாகை புத்தவிகாரத்தில் சேர்க்கும் வரை அவள் செய்த சாகசங்கள் ஓர் ஆண் மகனாலும் செய்ய இயலாதவை.

மீண்டும் தன் அத்தையை கொன்றவனை தேடி காடு மலைகள் கடந்து மதுரை வரை சென்று பல உண்மைகளை கண்டறிந்து மீள்கிறாள். கோடிகரை சதுப்பு நில காடுகளிலும், அலைகடலிலும், சுற்றி திரிந்து பல்வேறு சாகசங்கள் புரியும் துணிச்சலான பெண்.

**வானதி**

கொடும்பாளூர் அரசிளங்குமரி தாய் தந்தையற்ற பெண், மிகவும் மென்மையான மணம் கொண்டவள். குந்தவையின் அன்பிற்குரியவள். அருன்மொழி வர்மனை எண்ணி காதல் வளர்த்தவள். அவனை சந்திக்க, பயந்த சுபாவம் கொண்ட வானதி தனியாக திருவாரூர் நோக்கி குந்தவையை எதிர்த்து கிளம்புகிறாள் என்றாள் வானதியை அறிந்த வாசகர்கள் அவளின் மனதின் தூய காதலை உணரலாம்.

**மணிமேகலையும் - குந்தவையும் - ஒப்பீடு**

மணிமேகலையும், குந்தவையும் சம பலமுடைய கதாபாத்திரங்கள் இல்லை என்றபோதும் இருவருக்கும் ஆன ஒற்றுமை இருவரும் வந்தியதேவனை விரும்புகிறார்கள். இவ்விருவரின் காதலில் எது உயர்வுடையது என ஒப்பீடு செய்ய இயலாது எனினும் ஒவ்வொருவரது சூழலும, மன நிலைகளும் இருவரது காதலின் ஆழத்தை பிரதிபலிக்கின்றது.

குந்தவையை கண்ணால் காணும் பெரும் பேறு கிடைக்குமா? என எண்ணி அவளை காண வருபவன் வந்தியதேவன். அந்தளவு அவளது புகழும், அழகும், செல்வாக்கும் பிரசித்தமாயிருந்தது. அத்தகைய பெண்ணாகிய குந்தவை வந்தியதேவனிடத்தில் தன் மனதை பறிகொடுக்கிறாள். அவனை கண்டதும், அவன் குற்றமற்றவன் என எண்ணுகிறாள். பாதாள சிறையில் அவனை சந்தித்து தன் காதலை வெளிப்படுத்துகிறாள். அருள்மொழி வர்மனை காண செல்லும்படி பணிக்கிறாள். நந்தினியின் பணிப்பெண்னின் **'ஒற்றன் பிடிபட்டான்'** எனும் வார்த்தையைக் கேட்டு வந்தியதேவனின் கதியை எண்ணி துன்புறுகிறாள். இதன் மூலமே நந்தினி குந்தவையின் காதலை அறிகிறாள். பின்னரும், அண்ணனை நிழல்போல் காக்கும் கடமையை அவனுக்கு அளிக்கிறாள். ஆதித்த கரிகாலனின் மர்ம மரணத்திற்கு அவளது தூய காதல் மனம் வந்தியதேவனை சந்தேகிக்கவில்லை. மாறாக மணிமேகலை தரும் ஆதித்தியனின் ஓலை செய்தி வாயிலாக அருள்மொழி வர்மனிடம் கூறி வந்தியதேவனை விடுவிக்க பார்க்கிறாள்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் பார்த்திபேந்திர பல்லவன், வந்தியதேவனை விட ஆட்சி அதிகாரம் மிக்க இளவரசனின் காதலை ஏற்காமல் பல இன்னல்களுக்கு பிறகும் வந்தியதேவனை கரம் பிடிப்பதாக கல்கியின் செய்தி வாயிலாகவே அறிகிறோம்.

இதனை

**" யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புல பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே "**

எனும் குறுந்தொகையின் பாடல் வரிகளுடன் ஒப்பிடலாம், இத்தகைய வீரமும், விவேகமும், அன்பும் கொண்ட குந்தவையின் காதல் தூய கங்கையை போன்றும், வானம் அளவு உயர்ந்தும் காணப்படுகிறது.

மணிமேகலை முன்பே கூறினார்போல் பேதை பெண் தன் அண்ணன் வாயிலாக வந்தியதேவனை குறித்து அறிந்து அவன் பால் அன்பு கொண்டாள். பின் அதே அண்ணன் மதுராந்தகனை திருமணம் செய்ய சொன்ன போதும், ஆதித்த கரிகாலனை திருமணம் செய்து கொள்ளும்படியும் அரியனையில் ஏறி அரசியாகலாம் என கூறியும் அவள் மனதை மாற்றிக்கொள்ளவில்லை.

சுரங்க வழியில் கண்ட வந்தியதேவனை யாரும் அறியாவண்ணம் தப்புவிக்கவும், பின்னர், கரிகாலனின் மர்ம மரணத்தின் பின்பு அப்பழி வந்தியதேவன் மேல் விழாமல் இருக்க தானே ஆதித்திய கரிகாலனை கொன்றதாக கூறி எல்லோரையும் அவள் அன்பின் ஆழத்தை எண்ணி அசர வைக்கிறாள்.

அவள் அளித்த ஆதித்த கரிகாலனின் ஓலையே வந்தியதேவனை காப்பாற்றியது என்பது தின்னம். பின்னரும் கந்தமாறன் வந்தியதேவனை கொன்றதாக கூறியதும் அவள் அண்ணனிடம் சண்டையிட்டு, பின் அவன் மேல் கொண்ட அன்பினால், மனம் பிரண்டு பித்து கொள்ளும் போது, படிப்பவர் எவர் நெஞ்சையும் நெகிழ செய்துவிடுகிறாள். பின் வந்திய தேவன் அருகில் உயிர் விடும்போது இனி குறும்பும், மகிழவும் கொண்ட வந்தியதேவனை நாம் காண இயலாது என கதை ஆசிரியர் கூறும்போது நம் மனதின் பாரம் ஏறி மலையாக உட்கார்ந்து விடுகிறது.

இப்பேதை பெண் இமயம் தாண்டி உயர்ந்து விட்டாள் தன் கள்ள மற்ற அன்பாள். அது காதலையும் தாண்டி ஓர் பக்தி நிலையாகவே மாறிவிட்டது.

இப்படி இரு பெண்களும் ஒரு ஆண் மகனை காதலித்தாலும் தம்தம் நிலையில் இருந்து தமிழக பெண்டிர் ஒருவனை நெஞ்சில் இருத்தி விட்டால் வாழ்வும், தாழ்வு வீழ்வும் அவனோடே என்று எண்ணும் உயர் மதிப்பு நிலையை இருவேறு துருவங்களை கொண்ட பெண் கதைமாந்தர்கள் மூலம் கல்கி அவர்கள் எடுத்தியம்பிவிட்டாள்.

**பூங்குழலி – வானதி காதல் - ஒப்பீடு**

இவ்விரு பெண்களும் இருவேறு துருவங்களை ஒத்தவர்கள். வானதி அரசிளங்குமரி. பயந்த சுபாவம் உடையவள், மெல்லியல் மனதாலும், பூங்குழலி உடல் வலிவும், நெஞ்சில் நேர்மையும் திடமும் கொண்ட பெண். ஆசிரியர் இவள் கடல் பிரயாணத்தின் போது சமூத்திரத்தை ஆளும் சமுத்திரகுமாரியாகவே படைத்துவிட்டார். சதுப்புநிலத்தின் கொள்ளிவாய் பிசாசுகளை கண்டும் அஞ்சாதவள். அவள் பணிந்ததும், பயந்ததும் அருள்மொழி முன் மட்டுமே. இத்தகைய விசித்திர மங்கைக்கு அவள் குணத்தை சீர்தூக்க மந்தாகினியின் வாழ்க்கையின் தாக்கத்தை கூறி கதையாசிரியர் வாசகர்களை தெளிவுபடுத்துகிறார்.

அருள்மொழியை புத்தவிகாரத்தில் சேர்த்தாள். சேந்தன் அமுதன் உண்மை அன்பை அறிகிறான். அவன் பட்டத்திற்குரியவன் எனும் உண்மை அறியா நிலையிலேயே அவள் அன்பை வெளிப்படுத்தியதாக கட்டமைத்த கதாசிரியர் பூங்குழலியின் மேல் பெரும் நல் அபிப்ராயம் வாசகர்களுக்கு ஏற்படும்படி நியாயம் செய்து விடுகிறார்.

மேலும், மந்தாகினியின் மரணம், அரசி வானவன் மாதேவியும், குந்தவையும், அருள்மொழியும், மந்தாகினியிடம் கொண்ட அன்பை கண்டு தன் தவறான எண்ண போக்கை மாற்றிக் கொள்ளவும். உண்மை அன்பை ஏற்கவும் மனமாற்றம் அடைவதாக மிக அழகாக விவரித்துள்ளார் கல்கி.

வானதி குந்தவையிடத்தில் அன்பும், மதிப்பும், கொண்டவள், உற்ற தோழி என்பதோடு **"யானைபாகன்"** என்று எண்ணிய அருள்மொழியை இளவரசனாக நேரில் கண்ட அன்றே மயக்கமுறுகிறாள். இப்படி குந்தவை மட்டுமின்றி அருள்மொழி மற்றும் வாசகர் மனதில் ஊடுருவி விட்டாள்.

பூங்குழலிக்காக சபதம் ஏற்றாள் **"அரியனை ஏற மாட்டேன்"** என்று, இது அவளது அரியாசன ஆசையில்லாத அந்த உண்மை காதலை காட்டுகிறது.

**ஊரெல்லாம் துஞ்சி**
**உலகெல்லாம் நல்லிருளாய்**
**நீரெல்லாம் தேறிஓர்**
**நீளிரவாய் நீண்டதால்**
**பாரெல்லாம் உண்டகம்**
**பாம்பணையான் வாரானால்**
**ஆர்? எல்லே! வல்விளையேன்**
**ஆவிகாப் பார்இனியே**

இப்படியாக இந்த இரு பெண்களும் தம் உண்மை காதலால் அரசிளங்குமரர்களை அடைந்து மகிழ்வுறுகிறார்கள். நமக்கும் பேருவகை ஏற்படுவது தவிர்க்க இயலாதது,

**முடிவுரை**

காவியத்தில் பல முக்கோண காதல் இருப்பினும், பொதுயுகத்தில் எழுந்த காவியம் எனினும் பண்டய கால தமிழக பெண்டிர் காதல் நிலையை இக்காவியத்தில் மூலம் காண முடிகிறது, இப்பெண்டிர்களின் எல்லோரிலும் மணிமேகலை எம் மனதை வென்று இக்காவியத்தின் தன்னிகர் இல்லா நாயகியாக ஜொலிக்கிறாள் என அரிதியிட்டு முடிக்கிறோம்.

**மேற்கோள் நூல்கள்**

1) அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் கௌரா பதிப்பகம் (2004) சென்னை

2) திருக்குறள் , மூலமும் உரையும் நர்மதா பதிப்பகம் (2018) சென்னை

3) குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ. வே. சா.,,டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் பதிப்பகம் (2018) சென்னை

4) திருவாய்மொழி, நர்மதா பதிப்பகம் (2018) சென்னை